செய்தி வெளியீடு எண்: 634 நாள் : 17.12.2014

# பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர்களுடனான மாநில அளவிலான கலந்தாய்வுக் கூட்டம், கீழ்ப்பாக்கம் தலைமை அலுவலக கூட்டரங்கில், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நடப்பு காரீப் கொள்முதல் பருவம் 2014–15ல் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்ய தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. சம்பா பருவ நெல் அறுவடை வரும் ஜனவரி முதல் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அதற்கு முன்பாக, டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் தேவையான அளவுக்கு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட வேண்டுமென்றும், கொள்முதல் நிலையங்களுக்கு, நெல்லின் ஈரப்பதத்தை சோதனை செய்யும் ஈரப்பதமானி,(Moisture Meter) விவசாயிகள் கொண்டு வரும் நெல்லை இலவசமாக தூற்றிக் கொள்ள நெல் தூற்றும் இயந்திரங்கள், (Winnowing Machines) நெல் மூட்டைகளின் எடையை துல்லியமாக அறிந்து கொள்ள மின்னணு எடை மேடைகள் (Electronic Scales) போன்ற தளவாட சாமான்கள் மற்றும் போதுமான காலி கோணிப் பைகள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் ஆகியன இம்மாத இறுதிக்குள் கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு சேர்க்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் அலுவலர்களை கேட்டுக் கொண்டார்.

ஏற்கனவே செயல்பட்டு வரும் 151 கொள்முதல் நிலையங்கள் தவிர தேவைப்படும் இடங்களில் எல்லாம் கொள்முதல் நிலையங்கள் திறக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுமதி வழங்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் நிலைய பணியாளர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் ஆகியோரை உடனடியாக நியமிக்க வேண்டுமென்றும், திறந்தவெளி சேமிப்பு

கிடங்குகள், நவீன அரிசி ஆலைகள் ஆகிய இடங்களில் நெல் சேமிப்பு மையங்கள் ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சேமிப்பு கிடங்குகள் தவிர, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன கிடங்குகள், மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவன கிடங்குகள் ஆகியவற்றை தேவைக்கேற்ப உபயோகப்படுத்திக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுதவிர, போக்குவரத்து ஒப்பந்தகாரர்களுடனான கூட்டம் நடத்தி உள்மண்டல இயக்கம் மற்றும் வெளிமண்டலங்களுக்கு சாலை மூலமாகவும், சரக்கு இரயில் மூலமாகவும் கொள்முதல் செய்யப்படும் நெல்லை உடனுக்குடன் இயக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

நவீன அரிசி ஆலைகள் மற்றும் அரவை முகவர்களுக்கு நெல்லை ஒதுக்கீடு செய்ய தலைமை அலுவலக உத்தரவு பெற்று மண்டல மேலாளர்கள் நடவடிக்கையெடுத்து, கொள்முதல் நிலையங்களில் அன்றாடம் கொள்முதல் செய்யப்படும் நெல்லை ஒதுக்கீடு செய்ய ஆவன செய்ய வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டது.

இக்கொள்முதல் பருவத்தில் குறைந்தபட்ச ஆதார விலையாக குவிண்டால் ஒன்றுக்கு சாதாரண ரக நெல்லுக்கு ரூ.1360 என்றும், சன்ன ரக நெல்லுக்கு ரூ.1400 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் தமிழக அரசு, ஊக்கத்தொகையாக சாதா ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50ம், சன்னரக நெல்லுக்கு ரூ.70ம் வழங்கி உத்தரவிட்டுள்ளது. இதன்படி சாதா ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1410 என்றும், சன்னரக நெல் ரூ.1470 என்ற விலையிலும், விவசாயிகளிடமிருந்து அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும். 01.10.2014 முதல் 30.09.2015 வரை கொள்முதல் செய்யப்படும் அனைத்து ரக நெல்லுக்கும் இந்த கொள்முதல் விலை பொருந்தும். இதுவரை நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 4,700மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு எவ்வித சிரமமுமின்றி நெல் கொள்முதல் பணி சீரான முறையில் நடைபெற அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டுமென்றும், நெல் கொள்முதலில் எவ்வித புகார்களுக்கும் இடம் கொடுக்கமால், சந்தை உபரி (Marketable Surplus) முழுவதையும் கொள்முதல் செய்யவும், கொள்முதல் நிலையங்களில் கண்காணிப்பு பணிகளை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கலந்தாய்வுக் கூட்டத்தில் அரசு உணவுத்துறை முதன்மை செயலாளர் திரு.முகம்மது நசீமுத்தின்,இ.ஆ.ப., உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு.சு.கோபாலகிருஷ்ணன்,இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குனர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., உணவுப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குனர் திரு.கே.இராதாகிருஷ்ணன்,இ.கா.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**